**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**

இந்தியா வானிலை ஆய்வு துறை

தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம்

சென்னை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 12-04-2022**

**காஞ்சிபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-04-12 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-04-13 | 2022-04-14 | 2022-04-15 | 2022-04-16 | 2022-04-17 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 0.0 | 0.0 | 3.0 | 0.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 37.0 | 38.0 | 39.0 | 39.0 | 39.0 |
| டிமின் (° C) | 27.0 | 27.0 | 28.0 | 28.0 | 29.0 |
| RH I (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| RH II (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கிமீ) | 8.0 | 8.0 | 8.0 | 8.0 | 8.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 160 | 140 | 140 | 110 | 110 |
| மேகக்கணி (ஆக்டா) | 4 | 4 | 2 | 2 | 2 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டதைப் பொறுத்தவரையில், அடுத்து வரும் ஐந்து நாட்களில் 15.04.2022 அன்று மற்றும் இரு மாவட்டத்தின் தனித்த இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது மற்ற நாட்களில் வறண்ட வானிலையே நிலவ வாய்ப்புள்ளது. வெப்பநிலை அதிகபட்சமாக 37-39 டிகிரி செல்சியஸ் வரையும் குறைந்தபட்சமாக 27-29 டிகிரி செல்சியஸ் வரையும் பதிவாக்கலாம். மேலும் காற்றானது மணிக்கு 08 கி.மீ. வேகத்தில் கிழக்கு தென்கிழக்கு - தெற்கு தென்கிழக்கு திசையில் வீசலாம். காற்றின் ஈரப்பதமானது 50-70% வரை பதிவாக்கலாம். வானம் முதல் இரு நாட்கள் ஓரளவு மேகமூட்டமாகவும் மற்ற நாட்களில் பெரும்பாலும் தெளிவாக காணப்படும்.

## பொது ஆலோசனை:

வரும் 17.04.2022 – 23.04.2022 தமிழ் நாடு மற்றும் புதுவையை பொறுத்தவரையில் மழையானது இயல்பைவிட குறைந்தும், குறைந்தபட்ச & அதிகபட்ச வெப்பநிலை இயல்பான அளவே பதிவாக்கலாம் 15.04.2022 அன்று மழைக்கு வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பயிரில் பூச்சி மற்றும் பூஞ்சாண மருந்துகள் தெளிக்கும் நடவடிக்கைகளை தள்ளிவைக்கலாம். மழைக்கு வாய்ப்பில்லை என்பதினால் விவசாயிகள் மண்ணின் ஈரப்பத்தினை அறிந்து பயிர்களுக்கு பாசனம் செய்யலாம்.

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

விவசாயிகள் கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல் நோய்க்கான தடுப்பு ஊசியை அருகிலுள்ள கால்நடை மருந்தகத்தில் போடலாம்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| அரிசி | இளம் நாற்றங்காலில் இலை பேன் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்கத்தின் அறிகுறிகள் தென்படுமாயின் பாஸ்போமிடான் 40 எஸ்.எல் என்ற பூச்சிக்கொல்லியை 50 மி.லி தெளிக்கலாம். |
| நிலக்கடலை | நிலக்கடலை பயிரை வேர்அழுகல் நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயினை கட்டுப்படுத்த கார்பன்டாசிம் 1 கிராம் / லிட்டர் அல்லது ட்ரைக்கோடெர்மா விரிடி ஏக்கருக்கு 2.5 கிலோ வீதம் 50 கிலோ எருவுடன் கலந்து மண்ணில் இடலாம். |
| ஓக்ரா / லேடிஸின் விரல் | வெண்டையில் வெள்ளை ஈக்கள் மூலம் பரவும் மஞ்சள் நரம்புத் தேமல் நச்சுயிரி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயினை கட்டுப்படுத்த க்லோர்பைரிபாஸ் 2.5 மி.லி. + வெப்ப எண்ணெய் 2.0 மி.லி./ லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | மிளகாய் பயிரை மிளகாய் பேன் பூச்சிகள் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சியினை கட்டுப்படுத்த எமாமெக்டின் பென்ஜொவேட் 5 % SG மருந்தினை 4 கி /லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம். |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | காய்க்கும் பருவத்தில் உள்ள கத்திரி பயிரை காய் மற்றும் தண்டு துளைப்பான் பூச்சிகள் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சியை கட்டுப்படுத்த எமாமெக்டின் பென்ஜொவேட் 5 % SG மருந்தினை 4கிராம் /10 லி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | விவசாயிகள் கன்றுகளுக்கு குடல்புழு நீக்கம் செய்ய அருகிலுள்ள கால்நடை மருந்தகத்தில் அணுகலாம்.விவசாயிகள் கால்நடைகளுக்கு 30-50 கிராம் தாதுப்பை அடர்த்தீவனத்துடன் கலந்தளிப்பதால் பாலில் கொழுப்பு சத்தினை அதிகரிக்கலாம். |
| வெள்ளாடு | விவசாயிகள் ஆடுகளுக்கு அளிக்கும் பசுந்தீவனம்/மர இலைகள் மற்றும் அடர் தீவனத்தினை சரிவிகிதத்தில் அளிப்பதினால் ஆடுகளின் வளர்ச்சியை மேம்படுத்தலாம். விவசாயிகள் ஆட்டுக்கொட்டகையில் தாது உப்பு கட்டிகளை கட்டிவைப்பதன் ஆடுகளில் வளர்ச்சி விகிதத்தினை அதிகரிக்கலாம். |

## மீன்வளம் குறிப்பிட்ட ஆலோசனை:

| மீன்வளம் | மீன்வளம் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| உள்நாட்டு | விவசாயிகள் மீன்களின் தீவனமிடும் நேரத்தினை காலை 7-8 மணி மற்றும் மாலை 4-5 மணிக்கு மாற்றிக்கொள்ளலாம். மீன் குளத்தில் நீரின் நிறம் கரும்பச்சையாக உள்ளதா மற்றும் நீரில் ஏதேனும் தேவையற்ற வாசனை உள்ளதா என்பதினை அறிந்து, நீர் மாற்று விகிதத்தினை 10-20% வரை பின்பற்றலாம். |
| பொது மீன் | விவசாயிகள் குளத்து நீரின் ஒளி உட்புகா தன்மையை கணக்கிட்டு அதனை 30-45 செ.மீ. வரை பராமரிக்கலாம். மேலும் இயற்கையான உணவு உற்பத்தியை பெருக்க இயற்கை அல்லது இரசாயன உரத்தினை குளங்களில் இடலாம். |
| ஓர்ன்மென்டல் பிஷ் | அலங்கார மீன் வளர்ப்பவர்கள் மீன் தொட்டிகளில் போதிய அளவு நீர் வாழ் தாவரங்களை வளர்ப்பதன் மூலம் அலங்கார மீன்களை பாதுகாக்கலாம். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக்கன் | கோழிகளுக்கு பி- காம்ப்லெக்ஸ் திரவத்தினை குடிநீருடன் கலந்து அளிப்பதால் வெப்ப தாக்க அழற்சியை குறைக்கலாம். கோழி கொட்டகைகளை சுற்றி நீரில் நனைத்த சணல் பைகளை தொங்கவிடுவதால் வெப்ப தாக்கத்தினை குறைக்கலாம். |